விழுப்புரம் அதிமுக அலுவலகத்தை கைப்பற்ற இரு அணிகளிடையே மோதல்

அலுவலகத்துக்கு பூட்டு; போலீஸார் குவிப்பு

விழுப்புரம் மாவட்ட அதிமுக அலுவலகம் முன் பாதுகாப்புக்கு குவிக்கப்பட்ட போலீஸார். (உள்படம்) அலுவலகத்துக்கு போடப்பட்டிருந்த பூட்டு.

விழுப்புரம், மே 16: விழுப்புரம் மாவட்ட அதிமுக அலுவலகத்தை கைப்பற்றுவதற்கு புதிய மாவட்டச் செயலர் இரா.பசுபதி, முன்னாள் மாவட்டச் செயலர் சி.வி.சண்முகம் அணியினரிடையே மோதல் எழும் சூழல் நிலவியதால், கட்சி அலுவலகத்துக்கு பூட்டு போடப்பட்டு, பாதுகாப்புக்காக போலீஸார் குவிக்கப்பட்டனர்.

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலுக்குப் பிறகு தவெக அரசுக்கு ஆதரவு அளிப்பதென அதிமுகவில் எஸ்.பி.வேலுமணி, சி.வி.சண்முகம் ஆகியோர் தலைமையிலான அணி முடிவெடுத்தது. இதையடுத்து விழுப்புரம் மாவட்டச் செயலரான சி.வி.சண்முகத்தை அப்பதவியிலிருந்து நீக்கியதுடன், நகரச் செயலராக இருந்த இரா.பசுபதியை மாவட்டச் செயலராக நியமித்து, அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்தார்.

இதையடுத்து கட்சிக்குச் சொந்தமான மாவட்ட அலுவலகத்தின் சாவியை சி.வி.சண்முகத்திடமிருந்து பெற்றுத் தர வேண்டும். மேலும், உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து தர வேண்டும் எனக் கோரி மாவட்டக் காவல் துறை அலுவலகத்தில் புதிய மாவட்டச் செயலர் பசுபதி வெள்ளிக்கிழமை மனு அளித்தார்.

அதிமுக அலுவலகத்தில் போலீஸார் குவிப்பு: இந்த நிலையில், அமாவாசை நாளான சனிக்கிழமை மாவட்ட அதிமுக அலுவலகத்துக்கு மாவட்டச் செயலர் இரா.பசுபதி தனது ஆதரவாளர்களுடன் செல்வதாக அறிவித்தார். அதே நேரத்தில், அங்கு சி.வி.சண்முகமும் வர உள்ளதாக தகவல் வெளியானது. இதையடுத்து, பிரச்னைகள் ஏற்படலாம் எனக் கருதி, நூற்றுக்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

வாக்குவாதம்–தள்ளுமுள்ளு: இந்த நிலையில், மாவட்ட அலுவலகத்துக்கு சனிக்கிழமை காலை வந்த சி.வி.சண்முகத்தின் ஆதரவாளர்கள் சுமார் 50 பேர், கட்சி அலுவலகத்துக்குள் செல்ல முயன்றனர். அவர்களை போலீஸார் தடுத்து நிறுத்தி, சட்டம் – ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு கருதி யாரும் உள்ளே செல்ல வேண்டாம் என கேட்டுக் கொண்டனர். அதையும் மீறி அவர்கள் செல்ல முயன்று, போலீஸாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. பின்னர் போலீஸார் சமாதானப்படுத்தி, அவர்களை அங்கிருந்து கலைந்து போகச் செய்தனர்.

கூட்டத்தை நடத்திய மாவட்டச் செயலர்: இந்த நிலையில், அதிமுக அலுவலகத்துக்கு வருவதாகக் கூறியிருந்த மாவட்டச் செயலரான இரா.பசுபதி தலைமையிலான அதிமுகவினர், போலீஸாரின் வேண்டுகோளை ஏற்று, கட்சி அலுவலகத்துக்கு அருகிலுள்ள திருமண மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டம் நடத்தினர்.

பாதியில் திரும்பிய சி.வி.சண்முகம்: கட்சி நிர்வாகிகளை சந்திப்பதற்காக திண்டிவனத்திலுள்ள தனது வீட்டிலிருந்து முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் காரில் புறப்பட்டு சனிக்கிழமை காலை விழுப்புரம் நோக்கி வந்து கொண்டிருந்தார். கட்சி அலுவலகத்திலிருந்து சுமார் 500 மீட்டர் தொலைவுக்கு அப்பால் அவரது காரை நிறுத்திய போலீஸார், கட்சி அலுவலகத்துக்குச் சென்றால் சட்டம் – ஒழுங்கு பிரச்னை ஏற்பட வாய்ப்புள்ளதால், பாதுகாப்புக் கருதி அங்கு செல்ல வேண்டாம் எனத் தெரிவித்தனர். அதை ஏற்றுக்கொண்ட சி.வி.சண்முகம் கட்சி அலுவலகத்துக்குச் செல்லாமல், விழுப்புரத்திலிருந்து சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றார். மேலும், தனது ஆதரவாளர்களையும் அங்குசெல்ல வேண்டாம், சட்டரீதியாக சந்தித்து கட்சி அலுவலகத்தை மீட்போம் எனத் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினருக்கும் அழைப்பாணை: இந்த நிலையில், மாவட்ட அதிமுக அலுவலகம் தொடர்பான பிரச்னைக்குத் தீர்வு காணும் பொருட்டு, அதிமுக மாவட்டச் செயலர் இரா.பசுபதி மற்றும் மாவட்ட அதிமுக அலுவலகத்தை நிர்வகித்து வந்த முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்தின் ஆதரவாளரான குணசேகரன் ஆகிய இருவருக்கும் விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் உ.முருகேசன் அழைப்பாணை வழங்கினார். அதில், மே 18–ஆம் தேதி முற்பகல் 11 மணிக்கு விழுப்புரம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெறும். இக்கூட்டத்தில் இரு தரப்பும் தங்களிடம் உள்ள ஆவணங்களுடன் பங்கேற்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தவெக அரசின் நடவடிக்கைகளை பொறுத்தே இந்திய கம்யூனிஸ்ட் அணுகுமுறை இருக்கும்

மு. வீரபாண்டியன்

திருவாரூர், மே 16: தவெக அரசின் நடவடிக்கைகளை பொறுத்தே தங்களின் அணுகுமுறை இருக்கும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன் தெரிவித்தார்.

திருவாரூரில் செய்தியாளர்களுக்கு அவர் சனிக்கிழமை அளித்த பேட்டி:

கடந்த திமுக ஆட்சியில்தான், இந்தியாவில் வேறு எந்த மாநிலங்களிலும் இல்லாத நலத் திட்டங்கள் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டன. அந்த நலத் திட்டங்கள் தொடர வேண்டுமென தமிழகத்தில் புதிதாக அமைந்துள்ள தவெக அரசிடம் நாங்கள் வலியுறுத்துவோம். இன்னும் கூடுதலான நலத் திட்டங்களை புதிய அரசு தொடங்குமேயானால் அதையும் நாங்கள் வரவேற்போம். மக்களின் கோரிக்கைகள் பல கிடப்பில் உள்ளன. இவை எல்லாவற்றையும் புதிய அரசு செவிமெடுத்து அதை தீர்க்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துவோம்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை பொறுத்த வரை அமைச்சரவையில் இடம் பெற வேண்டும் என முயற்சிக்கவில்லை. கூட்டணி ஆட்சியில் பங்கேற்பதாக இருந்தால் குறைந்தபட்ச செயல் திட்டம் இருக்க வேண்டும்.

இடதுசாரிகள் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் எம்எல்ஏக்கள் 6 பேரும் வெளியிலிருந்து ஆதரிக்கிறோம். நல்லாட்சி தர வேண்டும். அரசின் அணுகுமுறை எப்படியோ அதைப் பொறுத்து எங்கள் அணுகுமுறைகள் அமையும்.

அதிமுக இரண்டு பிரிவுகளாக பிரிந்துள்ள சூழலில் சட்டம் சார்ந்து நடவடிக்கை அமையும். இந்த விவகாரத்தில் சட்டப்பேரவைத் தலைவரின் நடவடிக்கையை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

நதிநீர் பிரச்னையில் தமிழகம் நீதியை எதிர்பார்க்கிறது. நீதிமன்ற தீர்ப்பு இருக்கிறது. பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட முடிவுகள் இருக்கின்றன.

தண்ணீர் எங்களுக்கு தேவையான போது திறந்து விட வேண்டியது அவர்களின் அரசியல் கடமை என்றார் மு.வீரபாண்டியன்.

ஒற்றைக் கட்சி ஆட்சி முறைக்கு முடிவு: க.கிருஷ்ணசாமி

சென்னை, மே 16: தமிழகத்தில் முதல்வர் விஜய் தலைமையிலான ஆட்சி அமைந்ததன் மூலம், ஒற்றைக் கட்சி ஆட்சி முறைக்கு முடிவு கட்டப்பட்டுள்ளதாக புதிய தமிழகம் கட்சி தலைவர் க.கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் 59 ஆண்டுகளுக்குப் பிறகு திராவிடக் கட்சிகள் அல்லாத ஒரு ஆட்சியை தவெக தலைவரும், முதல்வருமான விஜய் அமைத்துள்ளார். அதேபோல், தமிழகத்தில் எழுதப்படாத விதியாக இருந்த வந்த ஒற்றைக் கட்சி ஆட்சி முறைக்கு முடிவுகட்டப்பட்டது. நேர்மையான, வெளிப்படையான ஊழலற்ற ஆட்சி நிர்வாகத்தை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அனைத்து தரப்பு மக்களின் எதிர்பார்ப்பு எவ்விதத்திலும் வீண் போய்விடக் கூடாது என்பதே அனைவரது விருப்பமாகும். திமுக கூட்டணிக்கு எதிராக தேர்தலில் களம் கண்ட விஜய் தற்போது, அக்கூட்டணி கட்சிகளின் உறுதுணையோடு ஆட்சி அமைத்துள்ளார். அதேபோல், அதிமுகவிலிருந்து பிரிந்து வந்த சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஆதரவையும் விஜய் நாடியுள்ளார்.

இவர்கள் தங்களது சுயலாபம், அதிகாரத்துக்காக தவெக ஆட்சி அமைக்க ஆதரவு தெரிவித்துள்ளனர். இது விஜய் ஆட்சி அமைக்க உறுதுணையாக இருக்குமே தவிர, அவரால் நேர்மையான ஆட்சியை வழங்க முடியுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அதேபோல், தவெக அரசை பலவீனமான அரசாக பிரதிபலிக்க பலர் முயற்சி செய்கின்றனர். அதற்கு முதல்வர் விஜய் ஒருபோதும் இடம் தரக் கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

காய்ச்சல் பாதிப்பு: கல்லூரி மாணவி உயிரிழப்பு

அம்பாசமுத்திரம், மே, 16: திருநெல்வேலி மாவட்டம், விக்கிரமசிங்கபுரத்தில் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட கல்லூரி மாணவி உயிரிழந்தார்.

விக்கிரமசிங்கபுரம் பிரதான சாலையைச் சேர்ந்த நடராஜன் மகள் சந்தன லட்சுமி (19). இவர் கோயம்புத்தூரில் உள்ள தனியார் கல்லூரியில் இளம் அறிவியல் முதலாம் ஆண்டு படித்து வந்தார்.

விடுதியில் தங்கிப் படித்து வந்த சந்தன லட்சுமி விடுமுறையில் விக்கிரமசிங்கபுரம் வீட்டுக்கு வந்த நிலையில் சில நாள்களாக காய்ச்சல் இருந்ததாம். தொடர்ந்து, காய்ச்சல் அதிகமானதால் அவருக்கு வலிப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து வியாழக்கிழமை அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டு, தொடர் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். அங்கு அவர் வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

வரி விளம்பரம்

மணமேடை

மணமகள் தேவை

US Citizen, IT educated, employed, Seventh-day Adventist Christian man, 38, 177, invites suggestions from Malayali Christian girls. 9895387922 , +1(971) 409 5540.

WANTED BRIDE

செ.முதலியார், B.E, 38/163, மாதம் 6 Lakh, மருமணம், குழந்தையுடன் வெளிநாடில் வேலை. நல்ல சிகப்பு. வீடுகள், நிலங்கள், கார் உள்ளது, வசதியானவர். திருமணமாகாத பெண் தேவை. சாதி, படிப்பு, வசதி தடையில்லை. புரோக்கர்கள் தவிர்க்கவும் PH: 79044955268

PUBLIC NOTICE

CHANGE OF NAME

NAME CHANGE

I, ROJA.S is legally wedded spouse of No. 15444808L, Rank NK, **Name: Sabarimani.V**, presently residing at Konagoundanur (Vill) Kerakodahalli (Po), Karimangalam (Tk), Dharmapuri (Dist), Tamil Nadu - 635 111 stating that I have changed my name from ROJA.S to **ROJA.N**

ROJA.S

அறிவிப்பு

கரூர் மாவட்டம், மேலக்கரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 1995 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ள எங்களது பழைய ஆவணமான ஆவண எண்.2371/1995, எண்.110, 5வது தெரு, பத்மநாப நகர், அடையாறு, சென்னை-600020 என்ற முகவரியில் காணாமல் போய்விட்டது. இந்த ஆவணம் யாருக்கேனும் கிடைத்தால், உடனடியாக திரு.எஸ்பி. எழிலழகன், கைபேசி எண். 94458 16698 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளுமாறும் அல்லது சென்னை சாஸ்திரி நகர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரியிக்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு / வனத்துறை

ஏலம் அறிவிப்பு (இணையதள வழியில் மட்டும்)

ந.க.எண்.2098/2026/ம நாள்: 14.05.2026

திருப்பூர் வனக்கோட்டம், வந்தரவு வனச்சரகம், புலவாச்சியார் சுற்றில் 2025–2026–ஆம் ஆண்டு CAMPA திட்டத்தின்கீழ் 15 ஹெக்டர் பரப்பில் வெட்டி அட்டி கட்டி வைக்கப்பட்டுள்ள சீகை மரங்களுக்கு எதிர்வரும் 04.06.2026–ஆம் தேதியன்று MSTC e-auction portal மூலமாக ஏலம் நடத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

பிணைவைப்புத்தொகை (10%) யினை ஏலம் நடைபெறும் இரண்டு நாட்களுக்கு முன்னதாக இணையதளம் மூலமாக செலுத்தவேண்டும். ஏல விளம்பர நிபந்தனைகளை (https://www.mstcecommerce.com) இணையதளத்தில் பார்த்துக்கொள்ளவும்.

ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

துறை இயக்குநர், ஆனைமலை புலிகள் காப்பகம், திருப்பூர் வனக்கோட்டம், உடுமலைப்பேட்டை

செ.ம.தொ.இ./414/வரைகலை/2026

IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் IDFC FIRST Bank

(முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெடாக இருந்து பின்னர் IDFC வங்கி லிமிடெடுடன் இணைக்கப்பட்டுத் தற்பொழுது IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது) | CIN : L65110TN2014PLC097792

பதிவு அலுவலகம்:- KRM டவர்ஸ், 8-வது தளம், ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை - 600031. தொ.பே: +91 44 4564 4000 | தொலைநகல்: +91 44 4564 4022

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழான அறிவிப்பு

கீழ்க்காணும் கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக் கடன்தாரர்கள் IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெடிடம் (முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெடாக இருந்து பின்னர் IDFC வங்கி லிமிடெடுடன் இணைக்கப்பட்டுத் தற்பொழுது IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது) கீழே குறிப்பிட்டுள்ள ஈட்டுறுதி செய்யப்பட்ட கடன்களைப் பெற்றுள்ளனர். கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக் கடன்தாரர்கள் ஆகியோரின் கடன்கள் உரிய சொத்துக்களை அடமானம் வைத்து ஈடு செய்யப் பெற்றுள்ளன. கடன் ஒப்பந்தங்களில் கூறப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றை அவர்கள் சரியாகக் கடைப்பிடிக்கத் தவறியதாலும் கடனைச் சரிவரத் திருப்பிச் செலுத்தாததாலும் இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின்படி அவர்களின் கடன்கள் செயல்படாச் சொத்தாக (NPA) வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவர்கள் IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெடுக்குச் (முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெடாக இருந்து பின்னர் IDFC வங்கி லிமிடெடுடன் இணைக்கப்பட்டுத் தற்பொழுது IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது) செலுத்த வேண்டிய தொகைகள் தொடர்புடைய அறிவிப்புகளின்படி பின்வரும் அட்டவணையில் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் அவற்றுக்கான வட்டியும் செலுத்தப்பட வேண்டும். இந்த வட்டியானது உரிய நாட்களிலிருந்து ஒப்பந்த விகிதப்படி கணக்கிடப்படும்.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	கடன் வகை	கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக்-கடன்தாரர்கள் பெயர்	பிரிவு 13(2)-இன் கீழான அறிவிப்பு நாள்	பிரிவு 13(2) அறிவிப்பின்படி கடன் பாக்கித் தொகை
1.	10047441674	வீட்டுக் கடன்	1. தனசேகர் R V 2. தேவி D	24.04.2026	ரூ.19,19,595.34/-

சொத்து முகவரி: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய குடியிருப்பு அபார்ட்மெண்ட். முதல்தளத்தில் உள்ள ஃபிளாட் எண். F3, அடித்தளப் பரப்பு 947 சதுர.அடி., (பொதுப் பகுதி சேர்த்து) மற்றும் அங்குள்ள மின்சார இணைப்பு, நீர், கழிவுநீர் மற்றும் வடிகால் இணைப்பு மற்றும் அங்குள்ள அனைத்து பொருத்துதல்கள் மற்றும் அமைப்புகளுடன் திறந்தவெளியில் உள்ள பொதுவான கார் நிறுத்துமிடம் மற்றும் நிலத்தில் 568 சதுர.அடி. பிரிக்கப்படாப் பங்கு உட்பட மொத்தப் பரப்பளவு 3902.5 சதுர அடியில் அடங்கியது, இந்த நிலத்தின் மீது கட்டப்பட்டுள்ள "சந்துருகி" என்று அறியப்படும் கட்டடம், சர்வே எண். 269/2, பட்டாப்படி புதிய சர்வே எண். 269/2c. அமைவிடம் - கதவு எண். 51, மேற்கு மாட வீதி, திருமுல்லைவாயல் கிராமம், முன்பு அம்பத்தூர் வட்டம், தற்போது ஆவடி வட்டம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், சென்னை, தமிழ்நாடு-600062. எல்லைகள்: கிழக்கு: கிருஷ்ணன் சொத்தாகிய ஃபிளாட் எண் F2, மேற்கு: ரேவதி சொத்து, வடக்கு: ரவி சொத்து, தெற்கு: ரமேஷ் சொத்து. மேற்சொன்ன சொத்தானது அம்பத்தூர் சார்பதிவு மாவட்டத்துக்கும் வட சென்னை பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது.

IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெடுக்குச் (முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெடாக இருந்து பின்னர் IDFC வங்கி லிமிடெடுடன் இணைக்கப்பட்டுத் தற்பொழுது IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது) செலுத்த வேண்டிய தொகைகளை மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி அந்தந்த நாட்களிலிருந்து ஒப்பந்த விகிதப்படியான வட்டியுடனும் செலவினங்கள், கட்டணங்கள் முதலானவற்றுடனும் இந்த அறிவிப்பு வெளியிடப்படும் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு நீங்கள் இதன் மூலம் அழைக்கப்படுகிறீர்கள். தவறினால் IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெடுக்கு (முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெடாக இருந்து பின்னர் IDFC வங்கி லிமிடெடுடன் இணைக்கப்பட்டுத் தற்பொழுது IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது) வர வேண்டிய தொகையைத் திரும்பப் பெறும் பொருட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அடமானச் சொத்துக்கள் மீது கீழே கையொப்பமிட்டுள்ளவர் SARFAESI சட்டம், பிரிவு 14 மற்றும் பிரிவு 13(4)-இன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி வரும். மேலும் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13)-இன்படி கடனீட்டுச் சொத்தை விற்க / குத்தகைக்கு விட அல்லது இது போன்ற வேறு எவ்வகையிலும் பெயர் மாற்றம் செய்ய நீங்கள் தடை செய்யப்பட்டுள்ளீர்கள்.

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர் IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட்

நாள்: 17.05.2026 (முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெடாக இருந்து பின்னர் IDFC வங்கி லிமிடெடுடன் இணைக்கப்பட்டுத் தற்பொழுது IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது)

இடம்: சென்னை, தமிழ்நாடு

கனரா வங்கி (ஒரு இந்திய அரசு நிறுவனம்)

சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, சென்னை [7901]
எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17
தொலைபேசி எண். 9740145622
மின்னஞ்சல் : cb7901@canarabank.com

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையதளம் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) & 9 உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு, குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்ட வங்கியில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடுசெய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை கனரா வங்கி, மண்டல அலுவலகம், தமிழகம் கிளை - ன் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ / அடையாளபூர்வ / மெய்நிலை கவாதீனம் செய்துள்ள சொத்துக்களை கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, "உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு", மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு என்கிற அடிப்படையில் 25.06.2026 அன்று காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை (5 நிமிட காலநீட்டிப்புடன் விற்பனை முடியும் வரை தொடர்ந்து நடைபெறும்) விற்பனை செய்யப்பட உள்ள மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

கடன்தாரர் பெயர் & முகவரி: (1) M/s Prabakaran Contractor உரிமையாளர்: திரு. பிரபாகரன். A, எண்.55, தண்ணீர் பந்தல்மேடு, வயலூர் கிராமம் மற்றும் அஞ்சல், கல்பாக்கம், தமிழ்நாடு – 603102 (2) உரிமையாளர் திரு. பிரபாகரன். A த/பெ. திரு. அசலியப்பன், எண்.55, அம்பேத்கர் தெரு, வயலூர், கல்பாக்கம், தமிழ்நாடு - 603102

கடன் நிலுவைத் தொகை: 30/04/2026 அன்றுள்ளபடி ரூ. 24,17,490.10 அதனுடன் எதிர்கால வட்டி.

சொத்தின் விவரங்கள்: செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருக்கழுகுன்றம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுகுன்றம் வட்டம், வயலூர் கிராமத்தின் பழைய சர்வே எண்.37/3, புதிய சர்வே எண்.193/9, பட்டா எண்.13 ஆகியவைகளில் அடங்கிய பரப்பளவு 915சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் அதில் தரை தளம் மற்றும் முதல் தளங்களில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு வீட்டு கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, EB சேவை இணைப்பு எண்.510-010-970. எல்லைகள்: வடக்கில்- திரு. முனுசாமி அவர்களின் உரிமைப்பெற்ற சொத்து; தெற்கில்- சாலை; கிழக்கில்- திரு. ஏகாம்பரம் அவர்களின் உரிமைப்பெற்ற சொத்து; மேற்கில்- திருமதி. முருகம்மாள் அவர்களின் உரிமைப்பெற்ற சொத்து; நாற்பரப்புகள்: வட புறம்: 21.அடி 5.அங்குலங்கள்; தென் புறம்: 24 அடி 2 அங்குலங்கள்; கிழக்கு புறம்: 40 அடி; மேற்கு புறம்: 40 அடி. CERSAI ID : 400057283525

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 25,00,000/- டேவணித்தொகை ₹ 2,50,000/- ஏலஉயர்வுத்தொகை ₹ 25,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி : 22.06.2026 ; நேரம் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை

மின் ஏல தேதி மற்றும் நேரம் 25.06.2026 நேரம் : காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை (5 நிமிட காலநீட்டிப்புடன் விற்பனை தொடர்ந்து நடைபெறும்)

டேவணித் தொகை செலுத்த கடைசி தேதி: விருப்பமுள்ள ஏலதாரர் குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% EMD டேவணித் தொகையினை M/s PSB Alliance Private Limited (baanknet) இன் இணையதளத்தில் நேரடியாக 25.06.2026 அன்று காலை 10 மணிக்குள் செலுத்த வேண்டும்.

மின் ஏலம் பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணையதளத்தில் (www.canarabank.com) 'E- Auction' இணைப்பில் தெரிந்து கொள்ளலாம் அல்லது கனரா வங்கி, சென்னை, சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17, கைபேசி எண்.9740145622, மின்னஞ்சல் cb7901@canarabank.com மூலமாகவோ (அல்லது) (M/s PSB Alliance Pvt. Ltd), BAANKNET போர்டல், கைபேசி எண். 8291220220, மின்னஞ்சல் :support.ebkray@psballiance.com உதவி சேவை மையத்தை தொடர்பு கொள்ளலாம்.

Portal of E-Auction:https://baanknet.com

தேதி : 15.05.2026 அதிகாரபூர்வ அதிகாரி,
இடம் : சென்னை கனரா வங்கி

இந்தியன் வங்கி (இந்தியன் வங்கி)

மணி கூண்டு கிளை
எண்.29, சேதுக் கட் சேரி, ராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி : 044-28516661, 28411274.
மின்னஞ்சல் : clocktower@indianbank.bank.in

திருத்தம்

12.05.2026 அன்று இந்நாளிதழில் திரு. மாதவன் & திருமதி. M. பேச்சியம்மாள் கடன் கணக்கு குறித்து வெளியான விற்பனை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்கான ரிசர்வ் விலை மற்றும் பிணை வைப்பு தொகையை (EMD), ரிசர்வ் விலை : ரூ.30.00 லட்சங்கள் மற்றும் பிணை வைப்பு தொகை (EMD) : ரூ.3.00 லட்சங்கள் என திருத்தி வாசிக்கவும். மற்ற குறிப்புகள் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் இல்லை.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

பொது அறிவிப்பு

NEW INDIA ASSURANCE
தி நியூ இந்தியா ஏஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
The New India Assurance Co. Ltd

தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

CIN No. L66000MH1919GOI000526
ஊரப்பாக்கம் நடுத்தர வணிக அலுவலகம் - 712008,
இரண்டாம் தளம், மனை எண் 14, GST சாலை, ஊரப்பாக்கம் - 603210.
அதிகாரியின் பெயர் மற்றும் தொடர்பு எண்: திரு. V. சரவணன், அலுவலகப் பொறுப்பாளர் - 7299445887

எண் 95, முதல் தளம், GST சாலை, மதுராந்தகம் - 603306 என்ற முகவரியில் இயங்கி வரும் எங்களது மதுராந்தகம் நடுத்தர வணிக அலுவலகம் (712008), 17/06/2026 அன்று முதல் மேலே குறிப்பிடப்பட்டுள்ள புதிய முகவரியில் இயங்கும். காப்பீட்டுத் தொடர்பான தேவைகளுக்கு, பாலிசிதாரர்கள், முகவர்கள் மற்றும் அனைவரும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள எங்களது ஊரப்பாக்கம் நடுத்தர வணிக அலுவலகம் - 712008, தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மண்டல மேலாளர் சென்னை மண்டல அலுவலகம்

கடன் வசூல் தீர்ப்பாயம்-III சென்னை

5வது தளம், சாஸ்திரி பவன், புதிய கட்டிடம், ஹாடோஸ் ரோடு, சென்னை-6
OA.No.758 of 2025

கனரா வங்கி, [IFSC Code.CNBR0003319] கொட்டிவாக்கம் கிளை, அதன் சார்பாக மேலாளர், எண்.2/57/2, 1-வது தளம், கிழக்கு கடற்கரை சாலை, பாலவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்-600 041 ...விண்ணப்பதாரர்

-எதிர்-

M/s.கிரீன் பாலா சூப்பர் மார்ட், அதன் சார்பாக உரிமையாளர், Mrs.J.சுஜனா [PAN No.JTPPS1673J] W/o.லேட்.S.ஜெகநாதன், 2/126 A ஹரிசந்திரா மெயின் ரோடு, ஈஞ்சம்பாக்கம், சென்னை-600115 ...பிரதிவாதி

பெறுநர்:
M/s.கிரீன் பாலா சூப்பர் மார்ட், அதன் சார்பாக உரிமையாளர், Mrs.J.சுஜனா [PAN No.JTPPS1673J] W/o.லேட்.S.ஜெகநாதன், 2/126 A ஹரிசந்திரா மெயின் ரோடு, ஈஞ்சம்பாக்கம், சென்னை-600115

ஐயா,
மேற்கண்ட விண்ணப்பமானது மனுதாரர் வங்கி உங்களிடமிருந்து 25.11.2024 அன்றுள்ளபடி ₹ 41,68,728.15 மற்றும் விண்ணப்பம் தாக்கல் செய்த நாளிலிருந்து திரும்ப செலுத்தும் காலம் வரை மாதாந்திர இருப்